**24.04.2025**

**MCOP.No. 127/2020**

**ம.சா. 2 : காசிமணி**

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-**

1) விபத்து எப்போது நடைபெற்றது என்றால் 05.05.2020ல் காலை சுமார் 11 மணிக்கு நடைபெற்றது. விபத்தில் யார் இறந்து போனார் என்றால் கனகராஜா. அவர் எங்கள் ஊர்காரர். விபத்து ரோட்டின் இடது புறம் நடைபெற்றது. மாதிரி வரைப்படத்தில் ரோட்டின் வலது பக்கமாக விபத்து நடைபெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் நான் வரும் போது எனக்கு இடது புறம் தான் விபத்து நடைபெற்றது. எனக்கு விபத்தை பற்றி எதுவும் தெரியாது என்றும், நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றும், மனுதாரர் எழுதிக்கொடுத்த சாட்சியத்தில் கையெழுத்து போட்டு விட்டு அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2) மாதிரி வரைப்படத்திற்கு எதிராக நான் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து நடந்த இடம் U-turn என்றால் U-turn தாண்டி அம்மு பஞ்சர் கடை அருகே கிழக்குபுறம் நடைபெற்றது. விபத்து சமயத்தில் கனகராஜா பஞ்சர் கடைக்கு வலது புறம் இருந்தார். கனகராஜா விபத்து சமயத்தில் ஸ்கூட்டியில் வந்தார். அவர் தான் வண்டி ஓட்டி வந்தார். வண்டி எண் தெரியாது. விபத்து சமயத்தில் கனகராஜா வண்டி அடித்த வலது புறம் விழுந்தார். அவரின் வண்டியின் பின்புறம் நெல் அறுக்கும் வண்டி இடித்தது.

3) விபத்து சமயத்தில் அவர் தலைகவசம் அணியவில்லை என்றால் சரியல்ல. அணிந்துஇருந்தார். அவர் அணிந்து இருந்த தலைகவசம் என்ன நிறம் என்று ஞாபகம் இல்லை. மனுதாரர் தாக்கல் செய்துள்ள பிண கூராய்வு அறிக்கையில் மரணத்தின் காரணம் தலையில் ஏற்பட்ட காயம் தான் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் அவருக்கு உடல் முழுவதும் அடிப்பட்டு இருந்தது. எனக்கு தலைகவசத்தின் நிறமே

தெரியவில்லை என்ற நிலையில் என்னுடைய முன் விசாரணையில் தலைகவசத்தை கழற்றி பார்த்தேன் என்று பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

4) விபத்தில் அடிப்பட்ட உடன் கனகராஜாவை அரசு மருத்துவமனைக்கு ஆம்புலென்சில் அழைத்து சென்றனர். நான் தான் ஆம்புலென்சுக்கு தகவல் கொடுக்கவில்லை. மற்றொரு நபர் தான் தகவல் கொடுத்தார். நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றும், மனுதாரர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் முன் விசாரணையில் அடிப்பட்ட கனகராஜாவை வாழப்பாடி அரசு மருத்துவமனைக்கு எடுத்து செல்லும் போது வாழப்பாடி அருகே விபத்து ஏற்பட்டதாக சொல்லியுள்ளேன், நான் ஆம்புலென்சுக்கு பின்னால் இரு சக்கர வாகனத்தில் சென்றேன். நான் சென்ற இரு சக்கர வாகனத்தின் எண்.TN54Y4290. வண்டி என்னுடையது அது வேறு நபரின் பெயரில் உள்ளது.

5) அந்த வாகனத்திற்கு நான் என்னுடையது என்பதற்கு பதிவு சான்று ஏதுவும் தாக்கல் செய்யவில்லை என்பதால் நான் ஆம்புலென்சுக்கு பின்னால் இரு சக்கர வாகனத்தில் செல்லவில்லை என்றால் சரியல்ல. வாழப்பாடி சுடுகாட்டிற்கு அருகே செல்லும போது XL வாகனம் ஆம்புலென்சுக்கு குறுக்கே வந்ததால் தான் விபத்து நடைபெற்றது. மேற்படி விபத்தை தடுப்பதற்ககாக ஆம்புலென்சு XL மீது மோதி பின்னிட்டு நின்று கொண்டு இருந்த லாரி மீது விபத்து ஏற்பட்டது. நான் குறுக்கு விசாரணைக்கு சொல்வதற்கும், முதல் விசாரணையில் சொல்லியுள்ளதற்கும் முற்றிலும் வேறுபாடு உள்ளது என்றால் சரியல்ல.

6) இரண்டாவது விபத்து பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்று சொன்னால் நான் அதை பார்க்கவில்லை. நான் பின்னால் வந்துக்கொண்டு இருந்தேன். நான் பின்னால் வந்து கொண்டிருந்த நிலையில் நான் விபத்தை பார்த்து இருக்க வாய்ப்பு இல்லை

என்றால் சரியல்ல. அந்த விபத்தை பற்றி நான் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் என் முன் விசாரணையில் 2வது விபத்து குறித்து தனியார் ஆம்புலென்சு ஓட்டுநர் 108க்கு தகவல் கொடுத்து பிறகு 108 வாகனம் வந்து வாழப்பாடி அரசு மருத்துவமனைக்கு எடுத்து சென்றது என்று சொல்லியுள்ளேன். நான் வாழப்பாடி அரசு மருத்துவமனையில் கனகராஜாவை பார்த்தேன். அப்போது மருத்துவர் பரிசோதித்து அவர் இறந்துவிட்டார் என்று தெரிவித்தார்.

7) தலையின் ஏற்பட்ட காயத்தின் காரணமாக தான் கனகராஜா இறந்துவிட்டார் என்று சொல்லியுள்ளேன். 2வது விபத்தை பற்றி எனக்கு தெரியாது என்றும், சொல்லிக்கொடுத்தன் பேரில்நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இறந்து போனவருக்கு பிண கூராய்வு ஆத்தூர் அரசு மருத்துவமனையில் செய்யப்பட்டது. வாழப்பாடியில் இருந்து இறந்து போனவரின் அண்ணனுக்கு தகவல் கொடுத்துவிட்டு, நான் ஆத்தூருக்கு வந்துவிட்டேன்.

8) காவல் நிலையத்தில் நான் புகார் கொடுக்கவில்லை. இறந்து போன கனகராஜாவின் அண்ணனும், 2,3 மனுதாரர்கள் கேட்டுக்கொண்டதற்க இணங்க நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் இந்த மனு போட்ட ஆராயி 1ம் மனுதாரர் ஆம்புலென்சில் வந்தார். அவர் கனகராஜா இறந்து போது ஆத்தூர் மருத்துவமனைக்கு வந்தது பார்த்தார். அவர் கனகராஜாவின் தாயார். அவர் எப்படி இறந்தார் என்று தெரியாது. 2ம் விபத்தின் போது ஆராயி உயிருடன் இருந்தாரா என்றால் ஆராயி என்னுடன் வரவில்லை. ஆம்புலென்சில் வரவில்லை.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S Digitally signed by GANESAN S Date: 2025.04.24 18:21:08 +0530

**Accidents Claim Tribunal, Attur.**